ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1714 - 2011 ජූලි මස 08 වැනි සිකුරාදා - 2011.07.08
*1714 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 862 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 865 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2011, யூலை மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, யூலை மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான ''புதிய சேர்வாளர்கள்'' ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, ஆவணி மாதம் 08 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2011, ஆனி 16.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | தலாவ | எப்பவல பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் நுவரகம்பலாத்த பிரிவில் விவாகப் (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், அநுராதபுரம் |

7-184

---

## இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

### தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்/பொறிமுறை) பதவி

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தில் நிலவுகின்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான (குடிசார்/ பொறிமுறை வெற்றிடங்களுக்குப் பொருத்தமான தகைமைகள் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.(1) **விண்ணப்பப்பத்திரங்கள் அனுப்பவேண்டிய விதிமுறைகள்.-** கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கிணங்க விண்ணப்பத்தினை "ஏ4" தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து தயாரித்து, பதிவுத்தபாலில் "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், த. பெ. எண் 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" என்ற விலாசத்திற்கு 2011.08.08 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை

உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப் பிக்கும் பதவியின் பெயரை தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

(2) விண்ணப்பங்கள் அதன் இறுதித் திகதியின் பின் கையேற்கப்பட மாட்டாது. விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும்போது தாமதம் ஏற்படும் சாத்தியம் உள்ளதால் அதனைத் தவிர்ப்பதற்கு முன்கூட்டியே விண்ணப்பித்தல் உகந்ததாகும்.

(3) நியமனத்திற்கு முன்பு ஏதாவது உண்மைக்குப் புறம்பான தகவல்கள் கண்டுபிடிக்கப்படின் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப் படுவதுடன் நியமனத்திற்குப் பின்பு அவ்வாறு ஏதாவது கண்டுபிடிக்கப் படின் சேவையில் இருந்து நீக்குவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

(4) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்திற்கு விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றதாக விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்பட மாட்டாது. தகுந்த தகைமைகள் அற்ற விண்ணப்பதாரி களின் விண்ணப்பங்களும் முறையான விதத்தில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

(5) விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்பட வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;
(3) தொழிற்றுறைசார் சான்றிதழ்கள், உறுப்புரிமைச் சான்றிதழ் ;
(4) வேலை அனுபவச் சான்றிதழ்கள்.

**2. கல்வித் தகைமைகள்**.- க. பொ. த. (உயர் தரம்) விஞ்ஞானப் பாடத்தில் பௌதிகவியல்/இரசாயனவியல் உள்ளிட்ட மூன்று பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

அத்துடன்

க. பொ. த. (சாதாரண தரத்தில்) இரு தடவைக்கு மேற்படாதவாறு மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் வேறு ஏதாவது ஒரு பாடம் உட்பட 4 திறமைச் சித்தியுடன் எல்லாமாக 6 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

**3. தொழில்துறை தகைமைகள்**.- விண்ணப்பதாரி தான் விண்ணப்பிக் கின்ற பதவிக்கு ஏற்புடையதாக குடிசார் அல்லது பொறிமுறைத் துறையில், கீழே தரப்பட்டுள்ள தகைமைகளில் ஒன்றையாவது பெற்றிருத்தல் வேண்டும் :-

(i) மொறட்டுவை பல்கலைக்கழகத்தினாலோ அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினாலோ வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

(ii) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட தேசிய பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா

அல்லது

(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா

அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பவியல் டிப்ளோமா

அல்லது

(v) இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் இயந்திர பொறியியல் பரீட்சையின் 1 ஆவது பகுதியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல்

அல்லது

(vi) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேல் குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பச் சான்றிதழை வழங்கக்கூடிய நிறுவனங்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய மேற்குறிப்பிடப்பட்ட சான்றிதழ் களுக்கு சமமான இலங்கைத் தொழில்நுட்ப சபையால் அங்கீகரிக்கக்கூடிய வேறு தொழில்நுட்பத் தகைமையைப் பெற்றிருத்தல்.

**4. சேவைக்காலம்**.- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனத்தில் இரண்டு வருடங்களுக்கு குறையாத குறித்த பதவியை உடைய வேலை அனுபவம்.

**5. வேறு தகைமைகள்**.- இலங்கைப் பிரசையாகவும், சிறந்த நல்லொழுக்கமும் நல்ல தேக ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**6. சம்பள அளவுத்திட்டம்**.- அரச நிருவாக சுற்று நிருப இல. 6/2006 (iv) இற்கு அமைவாக எம்என்-3-2006ஏ, ரூபா 15,005-4 x 180-6 x 240-11 x 320-20 x 360-ரூபா 27,885.

**7. வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (தற்போது அரச மற்றும் மாகாண சேவையில் பணியாற்றுபவர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை கவனத்திற்கொள்ளப் பட மாட்டாது.)

**8. ஆட்சேர்ப்பு முறை**.- தகைமையுடைய விண்ணப்பதாரிகளை, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, அப்பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிந்தெடுக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. தகைமைகள் மட்டும் பரீட்சித்துப் பார்க்கப்படும். நேர்முகப் பரீட்சைக்குத் தகைமைபெற ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் குறைந்தபட்சம் 40 புள்ளிகள் பெறப்பட வேண்டும்.

எழுத்துமூலப் பரீட்சைக்கான பாடங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு :-

| வினாப் பத்திரஇல. | பாடம் | காலம் | உள்ளடக்கப்பட்டுள்ள துறைகள் |
|---|---|---|---|
| 1 | விடயதானம் தொடர்பான அறிவு | 2 மணித்தியாலம் | கட்டிட நிர்மாணமும் பராமரிப்பு பகுதி யுடன் தொடர்பு பட்ட பல்தேர்வு வினாக்களும் மற்றும் வினாக் களை தெரிவு செய்வதன் மூலம் விடையளிக்கக்கூடிய கட்டமைப்பு வினாக்களும் |

| வினாப் பத்திரஇல. | பாடம் | காலம் | உள்ளடக்கப்பட்டுள்ள துறைகள் |
|---|---|---|---|
| 2 | பொது அறிவும் மதிநுட்பமும் | 1 மணித்தியாலம் | பல்தேர்வு வினாக் களைக் கொண்டது. விண்ணப்பதாரி கொண்டுள்ள சமூக பொருளா தார அரசியல் நிலைமை மற்றும் வரலாற்று விடயங் கள் தொடர்பான அறிவு மற்றும் அபேட் சகரிடம் காணப் படும் புரிந்து கொள் ளும் ஆற்றல், தர்க்க ரீதியாக சிந்திக்கும் ஆற்றல், விரைவாக முடிவெடுக்கும் ஆற்றல், மொழி, அட்டவணை, படம், வரைபு என்பவற்றை பயன்படுத்தவும் புரிந்துகொள்வ தற்குமான ஆற்றல் |

9. **அரச மொழிக் கொள்கையை அமுல்படுத்தல்**.- பொது நிர்வாக மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அ. நி. சு. இல. 07/2007 இற்கு ஏற்ப 2007.07.01 ஆந் திகதிக்குப் பின்னர் சேவையில் இணைந்துகொள்ளும் மொழிமூலத்திற்கு மேலதிகமான அடுத்த அரச கரும மொழி தொடர்பான புலமையை சேவையில் இணைந்து 5 வருடத்துக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

10. **சேவையில் அமர்த்தப்படும் நிபந்தனைகள்**.- (1) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்தைக் கொண்டது. விதவை, அநாதை/ தாரமிழந்தவர் அநாதை ஓய்வூதிய நிதியத்துக்கு சந்தா செலுத்த வேண்டும்.

(2) தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் பதவியுடன் தொடர்புபட்ட வகையில் வழங்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நிபந்தனைகள், தாபன விதிக்கோவை, அரச நிதிப் பிரமாணங்கள், இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும் சட்டவிதி களுக்குக் கட்டுப்பட்டு செயற்பட வேண்டும்.

(3) பொதுச்சேவை ஆணைக்குழுவினால் 2009.02.20 ஆந் திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் இல. 1589/30 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை நிபந்தனைகளுடன் தொடர்புபட்ட பொது நிபந்தனைகள் மற்றும் வழங்கப்படும் வசதிகள் என்பவற்றிற்கு விண்ணப்பதாரி உரித்துடையவர் ஆவர்.

11. அரச மற்றும் மாகாண அரச சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.

12. வெற்றிடமாக இருக்கும் இடங்களை முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியையோ நிரப்பாமல் விடுவதற்கு தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு உரிமை உண்டு.

(கலாநிதி) சித்திரால் அம்பேவத்த,
பணிப்பாளர் நாயகம்.

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.
2011.06.22.

(அலுவலக உபயோகத்திற்கு)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு**

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் தொழில்நுட்ப உத்தியோகத்தர் குடிசார்/பொறிமுறை பதவி

விண்ணப்பிக்கும் பதவி :
குடிசார்-1, பொறிமுறை-2

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம்-1, தமிழ்-2, ஆங்கிலம்-3

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.
(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.

2. தொடர்புகொள்வதற்கான விபரங்கள் :

(i) அலுவலக விலாசம் :----.
தொலைபேசி இலக்கம் :----.
(ii) தனிப்பட்ட விலாசம் :----.
தொலைபேசி இலக்கம் :----.
(iii) மின் அஞ்சல் முகவரி :----.
(விலாசம் அல்லது தொலைபேசி இலக்கத்தில் மாற்றம் ஏற்படின் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.)

3. பிறந்த திகதியும் இடமும் :----.

4. விண்ணப்ப முடிவுத் திகதியில் வயது :
வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

5. தேசிய அடையாள அட்டை இல. :----.

6. நீர் இலங்கைப் பிரசையா ? :----.

7. (i) பால் (ஆண்/பெண்) :----.
(ii) குடியியல் நிலைமை :----.
(திருமணமானவர்/திருமணமாகாதவர்/விதவை அல்லது தபுதாரர்) :----.

8. கல்வித் தகைமை.- க. பொ. த. சாதாரணம்) :----.
வருடம் :----. சுட்டிலக்கம் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |

க. பொ. த. உயர் தரம் :----.
வருடம் :----. சுட்டிலக்கம் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |

9. தொழிற்றுறைத் தகைமை :

| பரீட்சை/ டிப்ளோமா | வருடம் | தோற்றிய பாடங்கள் | பெறுபேறு | நிறுவனத்தின் பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. சேவை அனுபவம் :

| நிறுவனம்/ திணைக்களம் | பதவி | பதவியின் தன்மை | சேவைக்காலம் |
|---|---|---|---|
| | | | |

11. ஏனைய தகைமைகள் :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதிமொழிகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல் எதுவும் பிழையானது என நான் தெரிவுசெய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாகத் தெரியவந்தால் நான் எந்தவித நஷ்டஈடும் வழங்காது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

(இப்பகுதியானது ஏற்கனவே அரச தொழிலில் உள்ளவர் அல்லது பயிலுனராக இருப்பவர்களுக்கு மட்டும்.)

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தில் தொழில் நுட்பவியலாளர் (குடிசார்/பொறிமுறை) பதவிக்காக விண்ணப்பித்துள்ள திரு./ திருமதி/ செல்வி .................................... அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ...................................... பதவியில் பணிபுரிபவர்/ பயிலுனராக கடமையாற்றுபவர் என இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். அவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுமிடத்து அவரை சேவையிலிருந்து விடுவிக்கலாம்/விடுவிக்க முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் பெயரும் கையொப்பமும்.

திகதி :----.
உத்தியோகபூர்வ முத்திரை :----.

7-211

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை - 2011

இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறமை காண் தடைப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2011, ஒற்றோபர் மாதம், நகர இல. 1 கொழும்பு மற்றும் நகர இலக்கம் 2 யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடாத்தப்படும். விண்ணப்பப் படிவத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் நகரம் பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2011.08.05 என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதுடன், விண்ணப்பிக்கும் மொழியினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

2. வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பப்படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப் பட்டுள்ளது. அந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பதாரி தனது விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பப் படிவம் A4 அளவிலான கடதாசியில் மாத்திரமன்றி வேறு எந்தக் கடதாசியிலும் தயாரிக்கப் படலாகாது. இலக்கம் 01 தொடக்கம் 07 வரையில் முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலுமாக தயாரித்துக் கொள்ளல் வேண்டும். அதனை விண்ணப்பதாரர் தனது கையெழுத்துக்களினால் நிரப்புதல் வேண்டும். மேலும் விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்படும் போது அங்கே தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப் படிவத்தில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப் படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் இல்லாத விண்ணப்பப் படிவங்களும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் மற்றும் பூர்த்தி செய்யப்படாத தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும்

அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் இரண்டிற்கும் தோற்றுவதற்கு எதிர்பார்ப்பதாயின் அதுபற்றி சரியாக குறிப்பிட்டுள்ள இரண்டு விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்தில் மேலே உள்ள தகவல்களை உரிய முறையில் 7(i) அல்லது (ii) தகவல்களை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். மேலும், இந்த இரண்டு பரீட்சைகளுக்கும் பரீட்சைக் கட்டணம் தனித்தனியாகச் செலுத்தி இரண்டு பற்றுச்சீட்டுக்களைப் பெற்று தனித்தனியாக ஒட்டுதல் வேண்டும்.

3. விண்ணப்பப்படிவங்கள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக (பிரதேச செயலகங்களாயின் பிரதேச செயலாளரின் ஊடாக) 2011.08.05 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பத்தரமுல்லை, பெலவத்தை, ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும் என்பதுடன், விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியொன்று தம்மிடம் வைத்துக்கொள்ளுதல் பிரயோசனமானதாக இருக்கும். பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும் என்பதுடன், விண்ணப்பித்த மொழி பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது. அரச கரும மொழிக் கொள்கை பற்றிய விடயம் தொடர்பாக புதிய பிரவேச உத்தியோகத்தர்களினால் தமது விண்ணப்பம் அரச கரும மொழியில் அல்லது தாம் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட மொழியின் பிரகாரம் தமிழ் மொழியில் அல்லது ஆங்கில மொழியில் தயாரித்துச் சமர்ப்பிக்கப்படலாம்.

4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கால அட்டவணைப் பிரதியொன்றுடன் அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டவுடன் அதுபற்றி குறிப்பிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு **2** அல்லது **3** நாட்கள் கழிந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்களிடம் வைத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் பதிவு செய்த பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு அப்பால் உள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்பிவைக்கக் கூடிய தொலைநகல் முகவரியொன்றும் குறிப்பிடப்பட்ட உங்களது வேண்டுகோள் கடிதத்தை இலங்கை பரீட்சை ஆணையாளருக்கு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாகவிருக்கும் :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ;
(iii) பூரணமான முகவரி ;
(iv) விண்ணப்பப் படிவம் தபாலில் இடப்பட்ட தபாற்கந்தோர், பதிவு செய்த இலக்கம் மற்றும் திகதி.

5. **ஆளடையாளம்**.- விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற எல்லா விடயங்களின்போதும் பரீட்சை மண்டப அதிபதிக்கு தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்கென கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களிடையில் ஒன்று மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு

மேற்கூறப்பட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்க இயலாத விண்ணப்பதாரி ஒருவரின் அபேட்சகத் தன்மையை நிராகரித்தல் அல்லது ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கு பரீட்சைகள் ஆணையாளருக்கு அதிகாரமுண்டு.

6. **பரீட்சைக் கட்டணம்**.- இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சை விண்ணப்பதாரர்களிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணம் அறவிடப்படும்.

பரீட்சைக் கட்டணம் :

(அ) முதலாவது தடவைக்கு இரண்டு வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளுக்கும் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.
(ஆ) முதலாவது தடவையின் பின்னர் ஒவ்வொரு வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்காகவும் ரூபா 400.00 வீதம் அறவிடப்படும்.
(இ) ஒரு பாடத்திற்கு ரூபா 150.00 அறவிடப்படும்.

உரித்துடைய பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளரின் வருமானத் தலைப்பு இல.2003-02-13 இற்கு வரவிலிடப்படக்கூடியதாக நாட்டிலுள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலேனும் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டை விண்ணப்பப் படிவத்தில் உரிய இடத்தில் அதன் ஓரத்தைக் கழன்று போகாத வகையில் ஒட்டவும். பற்றுச் சீட்டின் போட்டோப் பிரதியொன்று தம்மிடம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமானதாக இருக்கும். வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகள் இரண்டிற்கும் தோற்றுவதாயின் பரீட்சைக் கட்டணத்தைத் தனித்தனியே செலுத்திய இரண்டு பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டு உரிய விண்ணப்பப் படிவங்களில் ஒட்டுதல் வேண்டும்.

7. இப்பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளரினால் நடாத்தப்படும் என்பதுடன், அவரினால் பரீட்சை நடாத்தப்படுதல் தொடர்பாக விதிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்படுத்தப்படுவர். இந்த வர்த்தமானிப் பத்திரிகையின் பகுதி 1 மற்றும் (II) (அ) பந்தியின் கீழ் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ள பரீட்சை விண்ணப்பதாரர்களுக்கான ஒழுங்குவிதிகள் இப்பரீட்சைக்கும் உரித்துடையதாகும். பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டப அதிபதிக்கு தங்களது கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

8. இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை உள்ள மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பிரவேசப் பத்திரமொன்று வழங்கப்பட்டுள்ள தங்களது திணைக்கள/அலுவலகங்களிலுள்ள உத்தியோகத்தர்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு திணைக்கள/அலுவலக தலைவர்களினால் கடமை லீவு வழங்கப்பட வேண்டும். விண்ணப்பப் பத்திரங்களை அனுப்பிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவதுடன், பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்குதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ளாரென ஏற்றுக்கொள்வதற்கான ஒருவராகக் கருதக்கூடாது.

9. இந்த ஒழுங்கு விதிகளில் அடங்கியில்லாத ஏதேனும் விடயமொன்று இருப்பின் நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் தற்றுணிபின்படி அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

10. முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையுடன் தொடர்புடைய விடயப்பரப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கு நடைபெறவிருக்கும் முதலாவது வினைத்திறன் தடைப் பரீட்சையின் பாடத்திட்டங்கள் பின்வருமாறு:

(அ) முதல் வினைத்திறன் தடைப்பரீட்சை பின்வரும் விடயங்களில் ஒவ்வொன்றும் 03 மணித்தியாலங்களைக் கொண்ட 04 வினைத்தாள்களைக் கொண்டிருக்கும்

(1) அரசாங்க நிதி நடைமுறைகள்
(பாட எண் - 01) – 100 புள்ளிகள்
(2) சட்டமும் முகாமையும்
(பாட எண் - 02) – 100 புள்ளிகள்
(3) நிர்வாகம்
(பாட எண் - 03) – 100 புள்ளிகள்
(4) அறிக்கை எழுதலும் முகாமைக்கு தகவல் வழங்கலுதலும்
(பாட எண் - 04) – 100 புள்ளிகள்

(ஆ) முதலாவது வினைத்திறன் தடைப்பரீட்சையின் பாடங்களுக்கு அலுவலர்கள் ஒரே தடவையில் தோற்றலாம்.

பரீட்சாத்திகள் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

பாடத்திட்டம் :

(1) அரசாங்க நிதி ஒழுங்கு விதிகள் (பாட எண் - 01).- நிதி ஒழுங்கு விதிகளின் பிரயோகம் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள், திறைசேரி சுற்றறிக்கைகள், வருமானம், செலவினம், வெளிநாட்டு உதவி, வருடாந்த மற்றும் குறைநிரப்பு மதிப்பீடுகள். அரச படுகடன் வழங்கல், கேள்விப்பத்திரங்கள், கட்டு நிதிகள் மற்றும் முற்பணங்கள் நாட்டின் கணக்கு, தொழிற்பாட்டு மற்றும் பொருளாதார வகுப்பாங்கங்கள், வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டமும் செயலாற்றுகையும், நிதி அமைச்சரின் பணிகள், பொதுத் திறைசேரி, திட்டமிடல் அமைச்சு, செயலாளர்கள் கணக்காய்வாளர், மற்றும் அரச கணக்குகள் குழு என்பன தொடர்புற்ற நிதி ஒழுங்கு விதிகளும் / நடைமுறைகளும் என்பன பற்றி பரீட்சார்த்திகள் பரிசோதிக்கப்படுவர்.

(2) சட்டமும் முகாமைத்துவமும் (பாட எண் - 02) :

சட்டம்

சட்டத்தின் வரைவிலக்கணம்
இலங்கையின் சட்ட முறைகள்
இலங்கையின் நீதிமன்ற முறைகள்
ஒப்பந்தச் சட்டம்
முகவராண்மைச் சட்டம்
பொருட்களின் விற்பனை
வாடகைக் கொள்வனவு
பேரம் பேச்சு வார்த்தை சாதனங்கள்
பிணையங்களின் உத்தரவாதம்
காப்புறுதி

முகாமை

முகாமைக்கான அறிமுகம்
முகாமையாளர்களது பணிகளும் தேர்ச்சியும்
திட்டமிடல் செயல்முறையும் ஒழுங்கமைப்பு முறை
மட்டங்கள் அமைத்தலும்
ஒழுங்கமைவு அமைப்பு
மனித வளங்களின் முகாமை
செயலாற்றுகை மதிப்பீடு
மேம்படுத்தல்
தலைமைத்துவம்
தொடர்பு கொள்ளல்
தீர்மானம் எடுத்தல்
பிரச்சினைகளைத் தீர்த்தல்
மாற்றத்தை முகாமை செய்தல்
முரண்பாடுகளைச் சமாளித்தல்
நேரம் முகாமைத்துவம்
முகாமைத் தார்மீகமும் பொறுப்பும்

(3) நிர்வாகம் (பாட எண் - 03).- தாபன விதிக்கோவையின் VII, IX, XI, XII, XV, XXIII, XXV, XXVI, XXVII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII அத்தியாயங்கள்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் விதிகமும், நடைமுறைகளும், தொகுதி I இன் i முதல் vi வரையிலான அத்தியாயங்கள்.

(4) அறிக்கை எழுதலும் முகாமைக்கு தகவல் வழங்குதலும் (பாட எண் - 04) :

முகாமைத்தகவல் தொடர்பில் உரிய காலத்திற்கு செய்தல், பூரணமாகச் செய்தல், தொடர்பு ஆகியவற்றின் முக்கியத்துவம்
தொடர்பு முக்கியத்துவம்
காலந்தர பொருள்களைக் கையாளுதல்
காலந்தர நிமித்த காரண அறிக்கை
கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புகள், அறிக்கை எழுதுதல்
வெளிப்படுத்த வேண்டிய முக்கிய பெறுபேறுகள்
பெறுபேறுகளுக்கு பொருள் விளக்கமளித்தல்
வேறுபாடுகளுக்கான யோசனை
தரவுகளைப் பகுப்பாய்வு செய்கையில் புள்ளிவிபர முறைகளின் உபயோகம்
செயலாற்று ஒப்பிடுதல்
விளக்க வரைபடம் மூலம் விளக்கவுரை
தொழிற்றுறைச் சொற்பொழிவுகள், விரிவுரைகளுக்குச் செவிமடுத்தல்
விரிவுரைகளை வாய்மொழிமூலம் அறிவித்தல்
குழுமக் கலந்துரையாடல்கள்
கருத்தரங்குத் திறமைகள்
உரை நிகழ்த்துதல்

இலங்கை கணக்காளர் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான 02 ஆம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான பாடத் திட்டம்

(அ) இலங்கை கணக்காளர் தடைப்பரீட்சை பின்வரும் பாடங் களைக் கொண்டிருக்கும் :

(1) முகாமைக் கணக்கீடு
(பாட எண் - 05) – 100 புள்ளிகள்
(2) அரசாங்க பொது நிதி முகாமை
(பாட எண் - 06) – 100 புள்ளிகள்
(3) முகாமையும் அமைப்பும்
(பாட எண் - 07) – 100 புள்ளிகள்

அலுவலர்கள் இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் பாடங்களுக்கு ஒரே அமர்வில் தோற்றலாம். அல்லது தாம் விரும்பினால் தனித்தனியாகத் தோற்றலாம். பரீட்சார்த்திகள் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு வினாத் தாளிலும் 40% புள்ளிகள் எடுத்தல் வேண்டும்.

(ஆ) பாடத்திட்டம்.- முகாமைக் கணக்கீடு (பாட எண் - 05) – 03 மணித்தியால வினாத்தாள்

(1) கணக்கீட்டில் கட்டுப்பாட்டுக் கோட்பாடு பின்னூட்டல் திறந்ததும், கணனிமுறை நியமச்செலவின் வகைகள், கருத்தியல் அடிப்படை மற்றும் நடைமுறை

நியமங்கள் மற்றும் செயலாற்றுகை அமைப்பின் மூலத்துவங்களும் செயன்முறையும், நியமங்களின் மீளாய்வு, கற்றல், வளைய, தூண்டல் என்பவற்றின் ஆய்வு முரண்களையும் உப முரண்களையும் பகுத்தல், அவற்றின் ஆய்வுக் கட்டுப்பாட்டு கணக்கீட்டு சார் தொழிற்படு வகைகள், பணக்கூறுகள், வரவுசெலவுத் திட்ட எண்ணக்கரு, பாதீட்டு, கட்டுப்பாடு, நிருவாக வகை, நிலையான மற்றும் வளைதகு பாதீடு, தலைமை பாதீடு, குறைநிரப்பு பாதீடு, பாதீடு நிலையங்கள், பாதீட்டு தயா சேர்த்திணைப்பிலும், செயல் நோக்கங் களிலும், முகாமையினால் கலந்து கொள்ளுதலும், பாதீட்டு காலமும் முக்கிய பாதீட்டு காரணிகளை இனமறிதல்.

(2) அரசாங்க பொது நிதி முகாமை (பாட எண் - 06) 03 மணித்தியால வினாத்தாள்

வினாக்களை தெரிவு செய்தல் அனுமதிக்கப்பட மாட்டாது.

அரசாங்க கணக்காளரின் பங்கு

அரசியல் அமைப்பு, சட்டவமைப்பு, ஆகியவற்றின் வடிவத்தின் கீழ் அரசாங்க நிருவாக அமைப்பு, மத்திய அரசாங்கம், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சி கூட்டுறவு இயக்கம் போன்றவற்றில் அறிவு.

பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு, திறைசேரியின் கடமைகள், திட்டமிடல் அமைச்சு, மதிப்பீட்டுக்குழு, கணக்காய்வாளர் தலைமை அதிபதி, அரசாங்க கணக்குக் குழு, திரட்டிய நிதியம், பாராளுமன்றக் கட்டுப்பாட்டின் பிரச்சினைகள்.

நிதியச்சுற்று வட்டம், திட்டமிடல், நிகழ்ச்சித் திட்டமிடல், தயாரித்தல், நிதிய அங்கீகாரம், கணக்கிடுதல், அறிக்கையிடல், மதிப்பீடு மற்றும் கணக்காய்வு.

மூலதனத்திற்கான கேள்வி, மூலதன உற்பத்தியும் ஊதியத்தை மதிப்பிடுகையில் பிரச்சனைகளும், கருத்திட்ட முன்னுரிமைப்படுத்தல், பிரமாணத்தின் நிதானமின்மைக்கான தள்ளுபடி, மீளக்கொடுப்பனவு, திருப்புதலின் கணக்கியல் வீதம், தற்போதய தேறிய மதிப்பு, கழிவுப் பதிவேட்டுப் பெறுமானம், வரிகளினதும் முதலீட்டு ஊக்குவிப்புக்களினதும் தாக்கமும் கருத்திட்ட செலவுக் கட்டுப்பாட்டு இறுதிக் கணக்காய்வும்.

உட்பிரமாணத் தீர்மானங்கள், உற்பத்திக் கலவை, உற்பத்தி செய்தல் அல்லது வாங்குதல், உற்பத்தி மாற்று முறைகள், முதலீட்டினால் ஏற்படும் பிரச்சினைகள், விலை கொள்கை, கடைக்கொள்கை, நுகர்வோரின் கேள்விப் போக்கின் தாக்கம், தேவையின் மீள் சக்தி, சந்தைப்படுத்துதலின் தந்திரம்.

செயலாற்றுகை, மதிப்பீட்டு நுட்பம், இலாபதரமான மூலப்பிரமாணமும் விகிதாசாரமும்.

செலவுப் பயன் பகுப்பாய்வு நடைமுறை மூலத்தின் முகாமை.

அரசாங்க வர்த்தக நிறுவனங்களின் நிதிக்கட்டுப்பாடு பாதீட்டு தயாரிப்பு முகாமை அறிக்கை கணக்கு ஆராய்தலும் நிதி விகிதங்களின் பிரயோகமும்.

பொது வர்த்தக நிறுவனங்களின் விலையிடல்.

கணக்கியலின் வடிவமும் உள்ளடக்கமும் அரசாங்க பொதுச் செயற்பாடுகளின் அறிக்கைகள்.

(3) முகாமையும் அமைப்பும் (பாட எண் - 07) 03 மணித்தியால வினாத்தாள்

பரீட்சாத்தி முகாமையும் அமைப்பும் பற்றிய தத்துவங்களை புரிந்திருக்கிறார் என்பதை அரசாங்கத் துறையில் பிரச்சினைகளுக்கும் சிக்கல்களுக்கும் ஒத்த தத்துவங்களை எங்ஙனம் பிரயோகிக்கிறார் என்பதை யும் நவீன முகாமைத்துவ திட்ட நுட்பங்களுடன் அவருக்கிருக்கும் பழக்கத்தையும் எடைபோடும் பாங்கிலேயே இப்பாடத்திற்கென வினாக்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

பீ.ஏ. அபேசேகர,
திறைசேரியின் பிரதிச் செயலாளர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01.
2011, யூலை 08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக பயன்பாட்டிற்காக)

இலங்கைக் கணக்காளர் சேவை உத்தியோகத்தர்களுக்கான
வினைத்திறன்காண் தடைப்பரீட்சை -2011

**EFFICIENCY BAR EXAMINATIONS FOR THE SRI LANKA ACCOUNTANTS SERVICE – 2011**

திணைக்களத் தலைவரின் ஊடாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

* பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் நகரமும் நகர இலக்கமும் — நகரம் — நகர இலக்கம்

(அறிவித்தலின் முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நகரத்தை ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் எழுதவும்)

* பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
(விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைப் பெட்டியினுள் எழுதவும்)

* விண்ணப்பிக்கும் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை :
முதலாவது - 1
இரண்டாவது - 2
(உரிய இலக்கத்தைப் பெட்டியினுள் எழுதவும்)

(வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆவது பந்தியைப் பார்க்கவும். இரண்டு பரீட்சைகளுக்கும் வெவ்வேறாக விண்ணப்பித்தல் வேண்டும்)

1. பெயர் :
 1.1 முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு :----.
 (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் உதாரணம்: SUNIL, A.B)
 1.2 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
 1.3 தேசிய அடையாள அட்டை இல :
 1.4 தொலைபேசி இல:
2. அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
 2.1 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
 2.2 அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
3. 3.1 பால் : பெண் - 1
 ஆண் - 2
 (உரிய இலக்கத்தைப் பெட்டியினுள் எழுதவும்)
 3.2 பிறந்த திகதி :
 ஆண்டு — மாதம் — திகதி
 3.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் தினத்தன்று வயது:
 ஆண்டு — மாதம்
4. வர்த்தமானி அறிவித்தலின் 10 ஆவது பந்தியின்கீழ் தோற்றும் பாடங்கள் :----.
 (ஒரு விண்ணப்பப்படிவத்தில் தோற்றவிருக்கும் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையுடன் தொடர்புடைய 4.1 அல்லது 4.2 மாத்திரம் பூர்த்தி செய்தல் வேண்டும்.)
 4.1 முதலாவது வினைத்திறன்காண் தடை :

| பாடம் | பாட எண் |
|---|---|
| ........................................................ | |
| ........................................................ | |
| ........................................................ | |
| ........................................................ | |
| ........................................................ | |

 4.2 முதலாவது வினைத்திறன்காண் தடை :

| பாடம் | பாட எண் |
|---|---|
| ........................................................ | |
| ........................................................ | |
| ........................................................ | |

5. இலங்கைக் கணக்காளர் சேவை வகுப்பு III இல் சேர்ந்த திகதி :
 ----.
 (சரியாக கடமையினைப் பொறுப்பேற்ற திகதியைக் குறிப்பிடுதல் வேண்டும்.)

6. சேவையாற்றும் இடத்தின் பெயர்: (பிரதேச செயலகம் ஒன்றாயின் அந்த அலுவலகத்தின் பெயர்) :----.

7. பரீட்சைக்குத் தோற்றுவது முதல் முறையாகவா ? :----.

8. பரீட்சைக்குத் தோற்றுவது முதல் முறையாக இல்லையெனில் செலுத்திய பரீட்சைக் கட்டணம் :

(i) செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கம் :----.
(iii) திகதி :----.

| பற்றுச்சீட்டை இங்கே நன்கு ஒட்டவும். |
|---|

9. மேற்படி விடயங்கள் சரியானவை எனவும், மேலே குறிப்பிடப் பட்டுள்ள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரிமையுள்ளது எனவும் குறிப்பிடுகிறேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் எடுக்கும் முடிவுகளுக்கும் உடன்படுகிறேன்.

----.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக கையொப்பம் இடுவதற்கு அங்கீகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் அல்லது, தமது பிரதேசத் தலைவரின் முன்னிலையில் விண்ணப்பதாரர் ஒருவர் கைச்சாத்திடல் வேண்டும்.

**கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்**.- எனது அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தரான, திரு./ திருமதி/ செல்வி/ ..................................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் ................................ ஆந் திகதி எனது முன்னிலையில் கைச்சாத்திட்டார் எனவும் இத்தால் உறுதி செய்கின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(i) மேலே குறிப்பிட்டுள்ள தகவல்களை பரீட்சித்துப் பார்த்ததாகவும், அவை சரியானவை எனவும்,
(ii) விண்ணப்பதாரர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியானவர் எனவும் உறுதி செய்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரையை இடவும்)

பதவி :----.
திகதி :----.

7-251

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.